சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஒ.எஸ்.எண்.154/2019

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சி.தினேஷ் குமார், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | வயது | 65 |
| த/பெ | நஞ்சைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | வெள்ளியங்காடு கிராமம். | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | -- |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

கருப்பசாமி, என் அத்தை சுப்பம்மாள் மற்றும் சிலர் சேர்ந்து பாகப் பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுப்பையன் என்பவர் புல எண்.498/2 பி-ல் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் சரி தான். புல எண்கள்.485/1 பி, 486/2 , 498/3 ஆகிய காலைகளில் உள்ள பூமிகள் புல எண்.498/2 ஏ பூமிக்கு மேற்கு புறமாக உள்ளது என்றால் சரி தான். அ.வ.எண்.111/2020 வழக்கின் பிராதுடன் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அந்த வரைபடம் சரியானது என்றும் அந்த வரைபடத்தை பற்றிய விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் ஆனால் வழக்கிற்காக வேண்டும் என்றே தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. 1ம் பிரதிவாதி வரதராஜன் மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.307/2018 என்ற வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் சொத்து சம்பந்தமாக ஒரு வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் தான் அ.வ.எண்.111/2020 வழக்கின் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட வரைபடம் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த வரை படத்தில் உள்ள வண்டித் தடம்

கிழபுறம் பள்ளவாரி வரை போகிறது என நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார் என்றால் கால் தடம் மட்டுமே போகிறது. வண்டித் தடம் போகவில்லை. கால் தடம் மட்டுமே போவதாக பொய்யாக கூறுகிறேன் என்றும் நானே வண்டித்தடம் என்று தான் கிரையம் கொடுத்து விட்டு தற்போது கால் தடம் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. சின்னசாமி வகையறா வண்டித்தடம் என வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கிலும் வண்டித் தடம் பள்ளவாரி வரை போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி யல்ல. புல எண்.498/2 பி-ல் உள்ள வீட்டில் இருந்து வாதிகளின் வீட்டிற்கு வண்டித் தடம் உள்ளது என்றால் சரி யல்ல. கால் தடம் மட்டுமே உள்ளது. அந்த தடம் பொதுவான வண்டித் தடம் என ஒப்பந்தம் எதாவது போடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு வண்டித் தடம் என ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றும் ஆனால் தெரியாது என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. புல எண்.498/2 பி-ல் மேற்கு புறமாக புல எண்.485/1 பி க்கு செல்ல ஒரே வண்டித்தடம் தான் உள்ளது என்றால் சரி யல்ல. அந்த வண்டித் தடம் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அந்த வண்டித் தடம் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரி யல்ல. அந்த வண்டித் தடம் புல எண்.498/2 சி - என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நானும் எனது சகோதரரும் 1987 -ம் ஆண்டு பாகப் பிரிவினை செய்து உள்ளோம் என்றால் சரி தான். அந்த பாகப் பிரிவினையில் எனக்கு 4 ஏக்கரும் எனது மகனுக்கு 1.46 ஏக்கரும் ஒதுக்கப்பட்டன என்றால் சரி தான். என்னுடைய சொத்தின் பழைய உட்பிரிவு 724/2 என்றால் எனக்கு தெரியாது. அதன் தற்போதைய உட்பிரிவு 498/2 ஏ என்றால் சரி தான். புல எண்,498/2 ஏ-ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 52 செண்ட் என்றால் 2 ஏக்கர் 51 செண்ட் ஆகும். அந்த பாகப் பிரிவினை ஆவணத்தில் எனக்கு பி தபசில் ஒதுக்கப்பட்டது என்றால் சரி தான். புல எண்.486/1 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 ஏக்கர் 95 செண்ட் ஆகும். புல எண்.486/1-ன் பழைய புல எண்.754/1 என்றால் எனக்கு தெரியாது. புல எண்.498/2 ஏ- க்கு கிழக்கு பக்கமுள்ள பூமியை ஒரு ரத்தினம் என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டேன் என்றால் சரி தான். ரத்தினத்திற்கு

கிரையம் கொடுக்கும் போது எல்லைகள் நிர்ணயம் செய்து அளவீடு செய்து தான் கொடுத்தேன். அவருக்கு மொத்தம் எத்தனை ஏக்கர் கிரையம் கொடுத்தேன் என்றால் 1 ஏக்கர் 20 செண்ட் கொடுத்தேன். அந்த கிரையம் 2020 ம் ஆண்டில் கொடுத்தேனா என்றால் வருடம் நினைவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணத்தில் 1 ஏக்கர் 2 செண்ட் தான் கிரையம் கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் தற்போது எனக்கு கண் பார்வை சரியாக தெரியவில்லை. எனக்கு கண் பார்வை நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. அந்த ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் தான் பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரி தான். ஆனால் அந்த ஆவணத்தை நான் படிக்க வில்லை. அந்த ஆவணத்தை எழுதி கொடுத்தவுடன் பட்டா மாறுதல் மனுவிலும் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் நினைவில்லை. அந்த ஆவணத்தில் மேற்படி காலையில் தென்புற கோட்டில் கிழமேலாக விட்டுள்ளபாதையையும் க.ச.498/2 சி நெ. காலையாக உள்ள கிழமேல் பாதையையும் இக்கிரையத்திற்கு பொதுவாக போய் வரவும் வண்டி வாகனாதிகள் ஓட்டிப் போய் வந்து பொதுவாக அனுபவித்து கொள்ளும் பாத்தியமும் சகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி யல்ல. மேற்படி கிரைய ஆவணம் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.04.2002 ம் நாளிட்ட கிரைய ஆவணம் 3286/2002 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் வண்டிப் பாதையை பற்றி தெளிவாக எழுதி கொடுத்து விட்டு தற்போது ஏமாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி யல்ல. மேற்படி ரத்தினத்திற்கு 06.01.2004 ம் தேதியன்று ஆவண எண்.33/2004 என்ற ஆவணத்தை நானும் எனது மகன் மற்றும் மகள் ஆகியோர்கள் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரி தான். அந்த ஆவணத்தின் சொத்து விபரத்தில் கிழமேலாக விடப்பட்டுள்ள பாதைக்கும் வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி யல்ல. நான் வழக்கிற்காக நான் எழுதி கொடுத்த ஆவணத்தையே பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரி யல்ல. நான் எழுதி கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாறுதலும் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2002 -ம் ஆண்டில் ரத்தினம் என்பவருக்கு கிரையம் கொடுத்த அதே

தேதியன்று தான் வள்ளியம்மாள் என்பவருக்கும் கிரையம் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரி தான். அவருக்கு 94 செண்ட் கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் 80 செண்ட் கொடுத்துள்ளோம். நான் எழுதி கொடுத்த கிரைய ஆவணத்திலேயே 94 செண்ட் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றும் தற்போது பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி யல்ல. அந்த ஆவணம் 3287/2002 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆவண எண் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நான் சாட்சிகள் முன்னிலையில் சார்பதிவாளர்அலுவலகத்தில் வைத்து தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரி தான். அந்த ஆவணத்தை எழுதிக் கொடுத்த அன்றே பட்டா மாறுதல் மனுவிலும் கையெழுத்து போட்டுள்ளேன்என்றால் சரி தான். அந்த ஆவணத்தில் க.ச.498/2 ஏ நெ. காலையில் தென்புற கோட்டில் கிழமேலாக விட்டுள்ள பாதையையும் க.ச.498/2 சி நெ. காலையாக உள்ள கிழமேல் பாதையையும் கிரைய சொத்திற்கு பொதுவாக போய் வரவும் வண்டி வாகனாதிகள் ஓட்டிப் போய் வந்து பொதுவாக அனுபவித்துக் கொள்ளும் பாத்தியம் சகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் கையெழுத்து போட்ட பின்னர் அதனை தட்டச்சு செய்துள்ளார்கள். அவ்வாறு தட்டச்சு செய்த விபரம் எனக்கு தெரியாது. சற்று நேரத்திற்கு முன்னர் சாட்சியம் அளித்த போது கண் தெரியாது என்று கூறினேன் என்றும் தற்போது தெரிகிறதா என்றால் மங்கலாக தெரிகிறது. இந்த விசயத்தில் இருந்தே நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிப்பது தெரிய வரும் என்றால் சரி யல்ல. நான் 94 செண்ட் ஐ கிரையம் கொடுக்காமல் 80 செண்ட் ஐ கிரையம் கொடுத்ததாக எனக்கு எப்போது விபரம் தெரிந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்த போது தான் தெரிய வந்தது. அதன் பின்னரும் நான் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சரி தான். கிரையத்திற்கு பின்னர் வாதி வண்டித் தடத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரி யல்ல. தாவா சொத்தில் இருந்து எவ்வளவு தொலைவில் என்னுடைய வீடு உள்ளது என்றால் 1 கி. மீட்டர் தூரம் இருக்கும். என்னுடைய வீடு வரை வண்டித்தடம் உள்ளதா என்றால் இல்லை. ½ கி மீட்டருக்கு மட்டுமே கால் தடம் உள்ளது. ½ கி. மீட்டர் பள்ளமாக உள்ளது. நான் கால் தடம் என பொய்யாக கூறுகிறேன் என்றும் வண்டித்தடம் தான் உள்ளது என்றால் சரி யல்ல. என்னுடைய

அத்தை சுப்பம்மாளின் பத்திரத்திலும் 5 முழ அகலத்தில் கிழக்கில் இருந்து மேற்காக செல்லும் தடம் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் உபயோகத்தில் இல்லை. கால் தடமாக தான் உள்ளது. வழக்கிற்காக கால் தடம் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. என்னுடைய தகப்பனார் என்னுடைய பூமிக்கு கிழ புறம் உள்ள தொப்பப்ப ரங்கைய கவுடர் என்பவரிடம் வண்டித் தடத்தை வாங்கி உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. 2012 – ம் ஆண்டில் நான் தண்டாயுதபாணிக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரி தான். அந்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரி தான். நான் தண்டாயுதபாணி என்பவருக்கு அவரிடம் வாங்கிய கடனை செலுத்த முடியாததால் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேன். தண்டாயுதபாணி என்பவர் சுப்ரமணி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் என்னால் கடன் கட்ட முடியாததால் தண்டாயுதபாணி சுப்ரமணிக்கு கிரையம் கொடுத்து விட்டார். அந்த ஆவணத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 ஏக்கர் 46 செண்ட் ஆகும். வாதி வள்ளியம்மாள் மற்றும் ரத்தினத்திற்கு நான் விற்றது போது மீதி உள்ள இடத்தை தான் தண்டாயுதபாணிக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் வள்ளியம்மாளுக்கு எழுதி கொடுத்த 80 செண்ட் ரத்தினம்மாளுக்கு 1 ஏக்கர் 20 செண்ட் போக மீதமுள்ள 3 ஏக்கர் 46 செண்ட் ஐ தான் தண்டாயுதபாணிக்கு எழுதி கொடுத்தேன். நான் வாதி வள்ளியம்மாளுக்கு 94 செண்ட் ஐ எழுதி கொடுத்து விட்டு தற்போது 80 செண்ட் எழுதி கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. நான் 3 ஏக்கர் 32 செண்டிற்கு தான் பொது அதிகார ஆவணம் எழுதித்தர முடியும் என்றால் சரி யல்ல. 1962-ம் ஆண்டில் புல எண்.498/1 பி காலையில் எனது தாத்தா ரங்கைய கவுடர் கிரையம் பெற்ற போது வண்டித்தடம் என குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் புல எண்.486/1 காலையில் 2 ஏக்கர் 1 செண்ட்ஐ தான் விற்க முடியும் என்றால் சரி யல்ல. பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி யல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.